# வேலூர் பொற்கோயில் - சுற்றுலா இயங்கியல் ஆய்வு
# ("Vellore Golden Temple" - Tourism, Perspective)

**S. Kesavan**
Discipline of Hindu Civilzation.
Faculty of Arts & Culture
Eastern University, SriLanka.
Email: manonmanys@yahoo.com

## ஆய்வுச் சுருக்கம்

தனிமனித, சமூக கூட்டிணைவு, சமூக விழுமியப் பெறுமானங்கள், பண்பாட்டுப் பரிமாற்றங்கள், அந்நியச் செலாவணியை ஈட்டுதல் போன்ற பாரிய நன்மைகளை உலகில் பல நாடுகள் சுற்றுலாத் துறை மூலம் ஈட்டுகின்றன. அங்கு நிலவும் யுத்தமில்லாத சூழ்நிலையும் இதற்கு முக்கிய காரணங்களுள் ஒன்றாகும். இலங்கையைப் பொறுத்தவரை கடந்த மூன்று தசாப்த காலங்களாக இருந்து வந்த யுத்தச் சூழ்நிலையால் இத்தகைய பாரிய நன்மைகளை அடைவதில் பின்னடைவினையே கண்டுள்ளது. ஆனால் இன்றைய சூழலில் மாற்றத்திற்குள்ளாக வேண்டிய தேவை இன்றியமையாததாகும்.

சுற்றுலா மூலம் அடையக் கூடிய நன்மைகளையும் அதன் மூலம் சமூகத்தில் இடம்பெறும் சாதகமான விளைவுகளையும் எடுத்துக் காட்டுவதே இவ்வாய்வின் நோக்கமாகும். அதாவது, தனிமனித,சமூக ஆளுமை விருத்தி,சமூக பண்பாட்டு பரிமாற்றங்கள், புதிய மனநிலை உணர்வு என்பனவற்றைப் பெறுவதும் கோயிற் சுற்றுலா பற்றிய அடிப்படை அறிவினை பெறச் செய்வதும், புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய இந்துக் கட்டடச் சிற்பக்கலை பற்றி அறிமுகப்படுத்துவதும் ஆய்வின் முக்கிய நோக்கங்களாகும். இதற்கு மாதிரியாக வேலூர் பொற்கோயில் எடுத்துக் கொள்ளப்படுவதோடு இக்கோயில் சுற்றுலாத் துறை மூலம் ஆற்றும் பாரிய சமூகப் பணிகளைப் போல் இலங்கையில் உள்ள வரலாற்றுப் புகழ் மிக்க கோயில்கள் மூலம் சுற்றுலாத் துறையை மேம்படுத்தி சமூகப் பணிகளை செயற்படுத்துவதற்கு முன்னோடியாக இவ்வாய்வு அமையும். இவ்வாய்வுக்கு முதனிலைத் தரவுகளாக பொற்கோயிலுக்குச் சென்று மேற்கொள்ளப்பட்ட, களவாய்வு, வினாக்கொத்து, செவ்வி காணல் போன்ற ஆய்வுமுறைகளில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் அமைகின்றன.இவ்வாலயம் தொடர்பாக இணையத்தில் வெளியாகியுள்ள கட்டுரைகள், நூல்கள், பத்திரிகைச் செய்திகள் ஆகியன இரண்டாம் நிலைத்தரவுகளாக உள்ளன.

சமூகத்தில் முரண்பாடுகள் காணப்படும் வேளையில் அதாவது யுத்த சூழ்நிலையில் இத்தகைய அனுகூலங்களை குறிப்பிட்ட சமூகம் இழந்து விடுகின்றது. இவை யுத்தத்திற்கு பின்னரான சூழலிலேயே சாத்தியப்படக்கூடியவை. இவ்வடிப்படையில் வேலூர் பொற்கோவில் இத்தகு சமூக விளைவுகளை ஏற்படுத்தி நிற்கின்றன. இதற்கு முக்கிய காரணம் முரண்பாடற்ற சமூகத்தின் மத்தியில் இவ்வாலயம் அமைந்துள்ளமையே. இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் இத்தகு சுற்றுலா பற்றிய அறிவினால், அடையக்கூடிய பல நன்மைகளை ஏற்படுத்த முடியும் என்பது ஆய்வாளரது எதிர்பார்பாகும்.

**Keywords:** பொற்கோவில், சுற்றுலா, கோயிற் சுற்றுலா், பொருளாதார வளர்ச்சி